உ

ஓம் நமோ நாராயணாய நம

## அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

## மொண்டிபாளையம்

## www.venkatesaperumal.com

# திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு

பல கோடி நூறாயிரம் *

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! * உன்

சேவடி செவ்வி திருக்காப்பு -1

**அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *

வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*

வடிவார் சோதி வலத்து உறையும் சுடர் ஆழியும் பல்லாண்டு*

படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச - சன்னியமும் பல்லாண்டே. -2

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின் *

கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் *

ஏழாட்காலும் பழிப்பு இலோம் நாங்கள் இராக்கதர் வாழ் * - இலங்கை

பாழாள் ஆகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. -3

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து*

கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி வந்து ஒல்லைக் கூடுமினோ*
நாடும் நகரமும் நன்கு அறிய நமோ நாராயணாய என்று*
பாடு மனம் உடைப் பத்தருள்ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே. -4

அன்டக் குலத்துக்கு அதிபதி ஆகி அசுரர் இராக்கதரை*
இண்டக் குலத்தை எடுத்துக் களைந்த இருடிகேசன் தனக்கு*
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்து அடிதொழுது ஆயிர நாமம் சொல்லி*
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே.-5

# திருப்பல்லாண்டு

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி*
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்* திரு வோணத் தி ருவிழாவில்
அந்தியம் போதில் அரியுரு ஆகி அரியை அழித்தவனை
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு என்று பாடுதுமே. -6

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி திகழ் திருச்சக்கரத்தின் *

உ

ஓம் நமோ நாராயணாய நம

## அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

## மொண்டிபாளையம்

## www.venkatesaperumal.com

கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடி குடி ஆட்செய்கின்றோம் *
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்தோளும் பொழி குருதி
பாயச் சுழற்றிய ஆழி வல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. -7

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும் *
கை அடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும் *
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல*
பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே. -8

உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்து கலத்தது உண்டு *
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடும் இத் தொண்டர்களோம் *
விடுத்த திசைக் கருமம் திருத்தித் திரு வோணத் திருவிழாவில் *
படுத்த பைந் நாகணைப் பள்ளி கொண்டானுக்கு பல்லாண்டு கூறுதுமே. -9

எந்நாள் எம்பெருமான் உன்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே அடியோங்கள் அடிக்குடில் வீடுபெற்று உய்ந்தது காண் *
செந்நாள் தோற்றித் திர மதுரையிற் சிலை குனித்து* ஐந்தலைய
பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே! உன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

உ

ஓம் நமோ நாராயணாய நம

## அருள்மிகுவெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்,

## மொண்டிபாளையம்

## www.venkatesaperumal.com

# திருப்பல்லாண்டு

அல்வழக்கு ஒன்றும் இல்லா அணி கோட்டியர் கோண் அபிமானதுங்கன் *
செல்வனைப் போல திருமாலே நானும் உனக்குப் பழ அடியேன் *
நல் வகையால் நமோ நாராயணா என்று நாமம் பல பரவி*
பல் வகையாலும் பவித்திரனே! உன்னைப் பல்லாண்டு கூறுவனே.

பல்லாண்டு என்று பவித்திரனைப் பரமேட்டியை* சார்ங்கம் என்னும்
வில் ஆண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டு சித்தன் விரும்பிய சொல் *
நல் ஆண்டு என்று நவின்று உரைப்பார் நமோநாராயணாய என்று*
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே.

***பெரியாழ்வார் திருவடிகளே சரணம்***